பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 27 புதன்கிழமை 10.05.2022 கதிர் 80

## O/L பரீட்சை திகதியில் மாற்றம் எதுவுமில்லை

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை ஒத்தி வைப்பதற்கு எந்தத் தீர்மானமும் எடுக்கப்பட வில்லை என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி திட்டமிட்டவாறு எதிர்வரும் 23ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலைமையில் பரீட்சை

☞ 2

## களனியில் வர்த்தகர் கொலை!

—உடைமைகளும் கொள்ளை

வர்த்தகர் ஒருவர் கொல லப்பட்டுள்ளமையுடன் அவரது உடைமைகளும் கொள்ளையி டப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் களனி, கொள்ளுவத்தை - பிலப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற் றுள்ளது.

நேற்றிரவு இந்த வர்த்தகர் உறங்கிக் கொண்டிருந்தபோது வீட்டினுள் நுழைந்த நபர் ஒருவர் இந்தக் கொலையை மேற்கொண்டமையுடன், அங்கிருந்த

☞ 2

# கொழும்பில் வீதியெங்கும் இராணுவம்; உலாவும் மக்களிடம் தீவிர விசாரணை!

### வன்முறையில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை என எச்சரிக்கை



கொழும்பில் இன்று காலை முதல் வீதியெங்கும் இராணுவத்தினர் குவிக்கப் பட்டுப் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.

ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் வீதிகளில் செல்லும் மக்களிடம் அடையாள அட் டைகளை வாங்கிப் பார்வை யிடும் இராணுவத்தினர், மக் கள் வெளியில் வந்தமைக் கான காரணத்தையும் கேட்டறிகின்றனர்.

அதேவேளை,

☞ 2

# புதிய பிரதமரை உடன் நியமித்துவிட்டு பதவியைத் துறக்கவேண்டும் கோட்டா!



### சுமந்திரன் அவசர கோரிக்கை

புதிய பிரதமரை உடனடியாக நியமித்துவிட்டு ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலக வேண்டும்.

– இவ்வாறு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான

☞ 2

## கோட்டாபய வீடு சென்றால் பிரதமர் பதவி ஏற்கத் தயார்



### – சஜித் விடாப்பிடி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால், பிரதமர் பதவியை ஏற்பதற்கு சஜித் பிரேமதாஸ தயாராகவே இருக்கின்றார்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உப

☞ 2

## சஜித் பிரதமராகப் பதவியேற்க சுயாதீன எம்.பிக்கள் பேராதரவு

### தயாசிறி எம்.பி. தகவல்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதம ராகப் பதவியேற்கத் தயா ராக இருந்தால், அவருக்கு முழு ஆதரவளிக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியும், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் அணியும் தயாராக உள்ளது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

☞ 2



## அரசைப் பொறுப்பேற்கத் தயார்!

### அநுர அதிரடி அறிவிப்பு; கட்சிகளின் ஆதரவு கோரல்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால், இடைக்கால அரசின் பொறுப்பைஆறுமாதங்களுக்கு ஏற்பதற்குத் தயார் என அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக் கள் சக்தி இன்று அறிவித்துள் ளது. இதற்காக நாடாளுமன் றத்தில் உள்ள கட்சிகளின் ஆதரவையும் கோரியுள்ளது.

ஜனாதிபதி பதவி விலகிய- தும், சிலவேளை ஏனைய



கட்சிகளின் பங்களிப்புடன் இடைக்கால அரசு அமைந் தால், அவ்வாறானதொரு ஆட்சி கட்டமைப்புக்கு எதிரணி யில் இருந்து ஆதரவு வழங்கு வதற்கும் தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இவ்விரு தேர்வுகளில் ஏதேனும் ஒரு வழியில் அமையும் இடைக்கால அர சியல் கட்டாயம் நிறைவேற் றப்பட வேண்டிய முக்கிய சில யோசனைகளையும் தேசிய மக் கள் சக்தி முன்வைத்துள்ளது.

6 மாதங்களுக்குப்

☞

## அச்சத்தாலேயே மஹிந்தர் திருமலை முகாமில் தஞ்சம்

### உறுதிப்படுத்தியது பாதுகாப்பு அமைச்சு



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு அழைத் துச் செல்லப்பட்டார் என்பது உண்மைதான் என்று பாது காப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன உறுதிப் படுத்தியுள்ளார்.

பாதுகாப்புக் காரணங் களுக்காகவே முன்னாள் பிரதமர் திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற

☞ 2

### அச்சத்தாலேயே .......

ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அலரி மாளிகையை ஆர்ப்பாட்டக்காரர்கள் சூழ்ந்ததால் முன்னாள் பிரதமரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. இதையடுத்தே மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

எனினும், நிலைமை இயல்பு நிலைக்குத் திரும்பியதும், முன்னாள் பிரதமர் அவர் விரும்பும் இடத்துக்கு மாற்றப்படுவார் - என்றார்.

### கோட்டாபய வீடு .......

தலைவரான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. இன்று அறிவித்தார்.

இன்று விசேட செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சவால்களுக்கு முகங்கொடுத்து நாட்டை மீட்பதற்காகப் பிரதமர் பதவியை ஏற்பதற்கு சஜித் பிரேமதாஸ தயார். எனினும், இந்த ஜனாதிபதியின் கீழ் பிரதமர் பதவியை ஏற்க முடியாது. அவர் பதவி விலகவேண்டும். இந்த விடயத்தில் எமது கட்சி உறுதியாக நிற்கின்றது.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணைவிவாதத்துக்கு வரும். அது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது - என்றார்.

### புதிய பிரதமரை .......

ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன், இது தொடர்பில் ஊடகங்களிடம் இன்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு ஜனாதிபதியும் பிரதமருமே முழுப் பொறுப்பு. அதனால்தான் இருவரையும் பதவி விலகக் கோரி மக்கள் ஒரு மாதத்துக்கு மேலாகப் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகியுள்ளார். இதையடுத்து முழு அதிகாரங்களும் ஜனாதிபதியின் கைகளுக்குச் சென்றுவிட்டன. இது நிலைமையை மேலும் மோசமாக்கும்.

இதனிடையே மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களும், வன்முறைச் சம்பவங்களும் தீவிரமடைந்துள்ளன.

எனவே, புதிய பிரதமரை உடனடியாக நியமித்துவிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பதவியிலிருந்து விலக வேண்டும். அப்போதுதான் நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு கிடைக்கும் - என்றார்.

### களனியில்.......

உடைமைகளையும் கொள்ளை யிட்டுச் சென்றுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த வர்த்தகர் 69 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் இதுவரை அடையாளம் காணப்படாத அதேவேளை, களனி வலயத் துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் கீழான குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

### கொழும்பில்.......

மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களில் வருபவர்களை இராணுவத்தினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். வாகனங்களையும் சோதனையிடுகின்றனர்.

இந்நிலையில், இன்று காலைமுதல் கொழும்பு நகரில் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மக்கள் அமைதியாகச் செயற்பட வேண்டும் என்று பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கேட்டுக்கொண்டுள்ளார்.

வன்முறையில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்த முப்படையினர் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என்றும் இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

### அரசைப் பொறுப் .......

பிறகு பொதுத்தேர்தலையும், அரசமைப்பு மறுசீரமைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பையும் ஒரே தடவையில் நடத்துமாறும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு கண்டு, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக தேசிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் வருமாறு:-

01. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும்.

02. பிரதமர் பதவி விலகியுள்ளதால், சபாநாயகர் தற்காலிக பதில் ஜனாதிபதியாகச் செயற்படலாம்.

03. ஆறு மாதங்களுக்குள் மக்கள் ஆணையுடன்புதியஅரசுஸ்தாபிக்கப்படல் வேண்டும். அதுவரை தற்காலிக அரசை அமைக்கலாம். அதற்காக இரு முன்மொழிவுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

அ) நிகழ்கால அரசியல் நெருக்கடி மற்றும் அராஜக நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டை புதிய வழியில் இட்டுச் செல்வதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ள தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது. எனவே, தேசிய மக்கள் சக்தி முதன்மைப் பொறுப்பை வகித்து, நாடாளுமன்றத்தின் ஊடாக தற்காலிக இடைக்கால அரசொன்றை எந்தவிதமான தடையுமின்றி நியமித்துக் கொள்வதற்கான வாய்ப்பை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குதல்.

ஆ) அவ்வாறு இல்லாவிட்டால், குறுகிய காலப்பகுதிக்காக நிகழ்கால நாடாளுமன்றத்தில் இடைக்கால அரசொன்றை நிறுவிக்கொள்ளுதல். தேசிய மக்கள் சக்தி அரசில் அங்கம் வகிக்காது. எதிரணியில் இருந்து ஆதரவு வழங்கும்.

04. மேற்படி இரண்டு தீர்வுகளில் ஏதேனும்ஒருவழியில்நியமிக்கப்படுகின்ற தற்காலிகமான இடைக்கால அரசு கீழ்க் காணும் பணியை ஈடேற்ற வேண்டும்.

அதாவது ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துகின்ற மற்றும் நிகழ்கால ஜனாதிபதியின் பதவிக் காலத்தை மட்டுப்படுத்துகின்ற அரசமைப்புக்கான 21 ஆவது திருத்தத்தை உடனடியாக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

### O/L பரீட்சை.......

ஒத்திவைக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகிவரும் நிலையிலேயே பரீட்சைகள் திணைக்களம் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

### சஜித் பிரதமராக.......

யின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இன்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# இராணுவ ஆட்சிக்கு இங்கு இடமில்லை!

## பாதுகாப்புச் செயலர் திட்டவட்டம்



கொழும்பு,மே11

இலங்கையில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவதற்கு எவ்வித முயற்சியும் இடம்பெறவில்லை. அதற்கான சாத்தியமும் கிடையாது என்று பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் ஏற்பட்ட வன்முறையால் 136 வீடுகள், சொத்துகள் முழுமையாக தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. அரச வாகனங்கள் உட்பட 41 வாகனங்கள் கொளுத்தப்பட்டுள்ளன. 60 வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. 219 பேர் காயமடைந்துள்ளனர். இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட 9 பேரின் உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சொத்து இழப்புகளின் பெறுமதி தொடர்பில் இன்னும் கணக்கிடப்படவில்லை.

முப்படையினருக்கு உத்தரவிட எனக்கு அதிகாரம் இல்லை எனக் கூறுகின்றனர். அதிகாரம் அதிகாரப்பூர்வமாக வழங்கப்பட்டுள்ளதால்தான் உத்தரவிட்டேன்.

கொழும்பில் கூட்டத்துக்கு வந்தவர்கள் காலிமுகத் திடலுக்குச் செல்வார்கள் என புலனாய்வாளர்களுக்கு தகவல் கிடைக்கவில்லை. அது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றது.

ஊரடங்கு சட்டத்தை நாளை நீக்கமுடியும் என நம்புகின்றோம்.

இலங்கையில் இராணுவ ஆட்சி இடம்பெற்றதில்லை. ஒருமுறை அதற்கான முயற்சி இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. எனவே, இராணுவ ஆட்சி இடம்பெறாது. அதற்கான சாத்தியமும் இல்லை. - என்றார்.

## துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என்ற

# பாதுகாப்புச் செயலரின் உத்தரவுசட்டவிரோதம்!

(கலையமுதன்)

சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது முப்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என்கிற உத்தரவு சட்ட விரோதமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொது சொத்துக்கள் அல்லது தனிப்பட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கேணல் நலின் ஹேரத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக தனது டுவிட்டர் தளத்தில் கருத்து தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன், அரசமைப்பின் 52(3) பிரிவின்படி அமைச்சரவை கலைக்கப்படும் போது அனைத்து அமைச்சின் செயலாளர்களும் பதவி வகிப்பதை நிறுத்துவார்கள்.

அந்த வகையில் பொது சொத்துக்கள் அல்லது தனிப்பட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டதாக கூறப்படும் அனுமதி சட்டவிரோத உத்தரவு என்றார்.

# யாழ் நகரில் பகலில் துணிகரத் திருட்டு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.11

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் இன்று பகல்வேளையில் 11 பவுண் நகை களவாடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இன்று பகல் 12.30 மணியளவில் வீட்டார் சமையல் வேலை மற்றும் இதர பணிகளில் ஈடுபட்டிருந்த சமயம் பிறிதொரு வாசல் கதவு ஊடாக உள்நுழைந்த ஓர் இளைஞன் அலுமாரியில் இருந்த 11 பவுண் தங்க நகைகளையும் வீட்டினுள் இருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியிலான கைத் தொலைபேசி ஒன்றையுமும் களவாடிச் சென்றுள்ளான். இந்தத் துணிகரத் திருட்டு சில நிமிடங்களில் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நேர்மை இல்லாத அழைப்பு

தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் – அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவது சம்பந்தமாக – நாட்டின் ஜனாதிபதி தரப்பிலிருந்தும் பாதுகாப்பு அமைச்சிலிருந்தும் வரும் செய்திகளில் நேர்மைத் தன்மை சந்தேகத்துக்கு உரியதாக – அவநம்பிக்கை ஏற்படுத்துவதாக – இருக்கின்றது. ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு. இப்போது நடக்கும் விளைவு இதற்கு முந்திய விளைவின் எதிர் விளைவுதான்.

நாட்டில் இப்போது நடக்கும் தீ வைப்புகள், தாக்குதல்கள், மக்கள் கூட்டமாகக் கூடி வன்முறைகளில் ஈடுபடுகின்றமையெல்லாம்ஏதோஒன்றின்எதிர்விளைவுகள்தான்.

ஜனாதிபதியினதும் அவரது பாதுகாப்பு அமைச்சினதும் மற்றும் அவருக்குக் கீழ் இருக்கும் பாதுகாப்பு தரப்புகளினதும் செயல் அல்லது செயலின்மையின் தொடர் விளைவுகள்தான் இவை.

இந்த நாட்டில் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் மிக உச்சக்கட்டத்தை அடைந்து, அவை தொடர்பில் மக்களின் கருத்தியல் போராட்டமாக வெடித்த காலத்திலிருந்து, கடந்த திங்கட்கிழமை காலை வரை நிலைமை இவ்வளவு தூரம் கட்டு மீறும் கட்டத்திற்குப் போகவில்லை.

தற்போதைய நெருக்கடிகள் தொடர்பில் மக்களின் உணர்வெழுச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் ஜனநாயக மயப்படுத்தப்பட்ட போராட்ட வடிவங்களாகவே இருந்தன. அமைதி வழி ஆர்ப்பாட்டங்களாகவே அமைந்தன.

முப்பது நாள்களையும் தாண்டி, காந்திய மார்க்கத்தில்தான் – அறநெறியில்தான் – சட்டத்துக்கு உட்பட்ட பாதையில்தான் – காலிமுகத்திடலில் போராடிய பொதுமக்கள் தங்கள் கருத்தியலை வெளிப்படுத்தி நின்றார்கள்.

முழு இலங்கை மக்களினதும் ஒன்றுபட்ட கருத்து நிலை வெளிப்பாடாகத்தான் அது முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சுத் தரப்பினரும் கூட மக்களின் ஜனநாயக வழிப்பட்ட போராட்டங்களுக்கு உரித்துண்டு, அது மதிக்கப்படும் என்றுதான் திரும்பத் திரும்பக் கூறி வந்தார்கள். ஆனால் நிலைமை இன்று தலைகீழாகி விட்டது. கட்டுமீறிவிட்டது. வன்முறைக் கோலம் கொண்டு விட்டது.

இந்த முழு திருப்பத்துக்கு – தலைகீழ் மாற்றத்திற்கு – யார் அல்லது எது காரணம்?

பிரதமரின் அலரி மாளிகை இல்லத்திலிருந்து வன்முறை வெறியோடு புறப்பட்ட காடையர் கூட்டம், அதுவரை அமைதியாக வழியில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்த காலிமுகத்திடல் போராளிகள் மீது வன்முறை அட்டூழியத்தை கட்டவிழ்த்துவிட்டு, பெரும் அடாவடித்தனம் புரிந்தது. அதன் தொடர் விளைவாகத்தான் நாடு இன்று வேதனையோடு தரிசித்துக் கொண்டிருக்கும் அராஜகங்கள் அரங்கேறுகின்றன.

அலரிமாளிகையில் இருந்து புறப்பட்ட இந்தக் குண்டர் குழுவை அரசின் பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் தடுக்கவும் இல்லை; கட்டுப்படுத்தவும் இல்லை. மாறாக, அதற்கு மறைமுக ஆதரவாக இடமளித்து பார்த்திருந்தனர் என்று மக்கள் சந்தேகிக்கின்றனர்.

அந்த அரசு ஆதரவு கொண்ட குண்டர் குழுவின் அட்டூழியத்தின் தொடர்ச்சிதான் இப்போதைய அனர்த்தங்கள்.

மக்கள் மக்களை அமைதி காக்க, சுமுக நிலையைப் பேண பாதுகாப்பு அமைச்சிடம் இருந்தும் ஜனாதிபதியிடம் இருந்து வரும் எந்த கோரிக்கையும் –வேண்டுகோளும்– காலிமுகத்திடலில்நடந்தமூலசம்பவங்களான அடாவடித்தனத்தை கண்டித்து, அதைப் புரிந்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்ற உறுதி மொழியுடன், பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை தருவதாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே அந்த வேண்டுகோளுக்கு மக்கள் செவிமடுப்பர். ஆனால் அந்த வேண்டுகோள்களில் அத்தகைய நேர்மைத்தன்மை – உன்மை போக்கு – இல்லை என்பதுதான் துரதிர்ஷ்டம்.

# நாட்டை யுத்தகளமாக மாற்றியதன் பொறுப்பை மஹிந்த, கோட்டா உள்ளிட்டோர் ஏற்கவேண்டும்

### ஓமல்பே சோபித தேரர் கடும் சீற்றம்



நாட்டை யுத்தகளமாக மாற்றியதன் பொறுப்பை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் ஏற்க வேண்டும் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பதவி விலகலைத் தொடர்ந்து சர்வமத தலைவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து பேச்சில் ஈடுபட்டனர். இந்தநிலையில் குறித்த சந்திப்பு தொடர்பாக கருத்து வெளியிடும் போதே ஓமல்பே சோபித தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் காலி முகத்திடல் அமைதி வழி போராட்ட களத்தில் மேற்கொண்ட தாக்குதல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

நாட்டை யுத்தகளமாக மாற்றியதன் பொறுப்பை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் ஏற்க வேண்டும்.

காலி முகத்திடல் போராட்டம் தொடர்பாக ஜனாதிபதியிடம் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தினோம். சம்பவம் தொடர்பில் முறையான மற்றும் துரிதகரமான விசாரணைகளை முன்னெடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

சம்பவ இடத்தில் பொலிஸார் செயற்பட்ட விதம் வெறுக்கத்தக்கது. பொலிஸ்மா அதிபர் குறித்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சி சாரா பிரதமர் தலைமையில் 15 பேரை உள்ளடக்கிய வகையில் சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்கவும், சிவில் தரப்பின் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய விசேட ஆலோசனை குழுவை ஸ்தாபிக்கவும் ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ளார். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மறு அறிவித்தல் வரை அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு சமுகம்கொடுக்கார்கள்

### தீபன் திலீசன் அறிவிப்பு

அதிபர் ஆசிரியர்கள் மறு அறிவித்தல் வரை கடமைக்கு வரமாட்டார்கள் என்பதுடன், இன்றைய அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் சமயோசிதமாக செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் ஆ. தீபன் திலீசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

காலிமுகத்திடல் போராட்டம் மீதான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு, இதன் மூலம் முழுமையான இராணுவ ஆட்சியை உருவாக்கும் நோக்கிலேயே கோட்டாபய அரசாங்கம் செயற்படுகிறது.

தமது ஆட்சிக்கான அதிகார போதையில், சிங்கள மக்களுக்கு பொய்களைக் கூறிய ஆட்சியாளர்கள் – தமிழினத்தை இனவழிப்புச் செய்து இன்று தன் சொந்த இனத்தின் ஜனநாயகப் போராட்டங்களையே நசுக்க முனைந்து, பாரிய வன்முறைச் சம்பவங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

கட்டுமீறிய இன்றைய சூழலில், இந்த கொலைகார, ஊழல், அடக்குமுறை ஆட்சி–யாளர்கள் மக்கள் மட்டத்திலிருந்து அகற்றப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

எனவே ஜனாதிபதி கோட்டாபய உள்ளிட்ட அரசாங்கம் அகற்றப்படும் வரையில் அனைத்து தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தைத் தொடரவுள்ளோம்.

இதன்படி அனைத்து ஆசிரியர்கள், அதிபர்கள் மே 10 ஆம் திகதி முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம் என்பதையும் –பணிப்பகிஷ்கரிப்பின் போது, விடுமுறை தொடர்பாக விண்ணப்பிக்கவோ அல்லது விடுப்பு தொடர்பாக அறிவிக்கவோ வேண்டியதில்லை என்பதையும் அறியத் தருகின்றோம்.

எனவே, அதிபர் ஆசிரியர்கள் மறு அறிவித்தல் வரை கடமைக்கு வரமாட்டார்கள் என்பதுடன், இன்றைய அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பாக சமயோசிதமாக செயற்படுமாறும் கேட்டுக் கொள்கின்றோம். – என்றுள்ளது.

# பொதுமக்களை குழப்பமடையச் செய்யும் எந்தவொரு தரக்குறைவான செயலிலும் முப்படையினர் ஈடுபடார்கள்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உத்தரவாதம்

பொதுமக்களை குழப்பமடையச் செய்யும் எந்தவொரு தரக்குறைவான செயலிலும் முப்படையினர் ஈடுபட மாட்டார்கள் என பாதுகாப்பு படைகளின் தலைமையதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களால் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்து ஆத்திரமடைந்த பொது மக்கள் முன்னாள் பிரதமர் மற்றும் அவரது ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் மீது அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் பொது மக்கள் அவர்களது வாகனங்கள், வீடுகள் உள்ளிட்ட சொத்துக்களை அழித்து பதிலடி



கொடுத்து வருகின்றனர். அத்துடன், பொதுமக்களின் சொத்துக்களை திருடுவோர், சேதங்களை விளைவிப்போர் மீது முப்படையினர், துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கான உத்தரவு பாதுகாப்பு அமைச்சினால் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே பாதுகாப்பு படைகளின் தலைமையதிகாரி ஜெனரல் வேந்திர சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைனுக்கு மேலதிகமாக 40 பில்லியன் டொலர் உதவி



## அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஒப்புதல்

உக்ரைனுக்கு மேலதிகமாக 40 பில்லியன் டொலர் உதவியை வழங்க அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஒப்புதல் அளித்துள்ளது. ரஷ்யாவின் மூன்று மாத காலப் படையெடுப்பை முறியடிக்க கிய்வ் உதவிக்கு அதிக நிதி தேவை என ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்தமையை அடுத்து இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன்படி நேற்று இடம்பெற்ற வாக்கெடுப்பில் உக்ரைன் சட்டமூலத்திற்கு ஆதரவாக 368 வாக்குகளும் எதிராக 57 வாக்குகளும் கிடைத்தன இலையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த வகையில் ஏப்ரல் மாதத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விடுத்த கோரிக்கையை விட 7 பில்லியன் டொலர் அதிகமாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

## 60 ஆண்டுகளில் இதுவே முதன்முறை

### பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் இன்றி நடந்த நாடாளுமன்ற விழா அவையை அலங்கரித்தது கிரீடம்



பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் கடந்த 60 ஆண்டுகளில் முதன்முறையாக நாடாளுமன்ற விழாவில் வயது மூப்பு காரணமாக பங்கேற்கவில்லை. பிரிட்டன் ராணியாக இரண்டாம் எலிசபெத் பொறுப்பேற்று அடுத்த மாதத்துடன் 70 ஆண்டுகள் நிறைவடையவுள்ளது. இதனை கோலாகலமாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் தயாராகி வருகின்றன. இளவரசர் பிலிப்ஸ் கடந்த ஆண்டு மரணமடைந்த நிலையில், 96 வயதாகும் ராணி, வயது மூப்பின் காரணமாக அவதியுற்று வருகிறார். கடந்த ஆண்டு கொரோனா தாக்கத்திற்கு பிறகு அவருடைய உடல் நிலை மிகவும் மோசமடைந்ததால் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்த்து வருகிறார்.

இந்நிலையில் 60 ஆண்டுகளில் முதன்முறையாக இரண்டாம் எலிசபெத் இல்லாமலேயே பிரிட்டன் நாடாளுமன்ற கூட்டம் பாரம்பரிய முறைப்படி தொடங்கியது. ராணியின் இடத்தில் இளவரசர் சார்லஸ் இருந்து விழாவை சிறப்பித்தார். அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரிட்டன் நாடாளுமன்றத்தின் தொடக்க விழா உரையை ராணி நிகழ்த்துவதே பாரம்பரிய வழக்கமாக உள்ளது. இருப்பினும் ராணி இரண்டாம் எலிசபெத் பங்கேற்காததால் அவரது மகன் சார்லஸ் உரையாற்றினார். அவருக்கு அருகில் ராணியின் கிரீடம் வைக்கப்பட்டிருந்தது. உரையை மேற்கொள்ளும் போது ராணியின் இந்த அரசு மேற்கொள்ளும் என்றே சார்லஸ் தெரிவித்தார்.

சார்லஸுக்கு அருகில் அவரது மனைவியும், இளவரசியுமான கமீலா மற்றும் அவரது மகனும் இளவரசருமான வில்லியம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத், தனது 70 ஆண்டு கால பொதுவாழ்வில் 1959, 1963 ஆகிய ஆண்டுகள் மட்டுமே நாடாளுமன்ற தொடக்க விழாவில் பங்கேற்றதில்லை. இந்த இரு ஆண்டுகளிலும் அவர் கர்ப்பமாக இருந்தார்.

ஆண்டுதோறும் இந்த விழாவில் ராணி சாரக் வண்டியில் வந்து பாதுகாவலர்கள் சீருடையில் அவருக்கு அணிவகுப்பு மரியாதை செலுத்துவதை காண பலரும் திரளுவது வழக்கமாகும். வயது மூப்பு காரணமாக அரச நடைமுறைகளில் இருந்து ஒதுங்கி வரும் ராணி, படிப்படியாக தனது பொறுப்புகளை இளவரசர் சார்லஸிடம் அளித்து வருவதாக கூறப்படுகிறது. விரைவில் அவர் ஓய்வுபெற உள்ளார் எனவும் கூறப்படுகிறது.

## கிழக்கு ஆசியாவின் கடற்பகுதியில் சீனாவின் அத்துமீறல் தாய்வான் வழியாக கப்பலை அனுப்பியது அமெரிக்கா



கிழக்கு ஆசியாவின் கடற்பகுதியில் சீனாவுடனான பதற்றங்கள் மீண்டும் அதிகரித்துள்ள நிலை யில் தாய்வான் வழியாக அமெரிக்க கடற்படை தனது இரண்டாவது கப்பலை அனுப்பியது.

சர்வதேச சட்டத்தின்படி தாய்வானுக்கு அருகில் யு.எஸ்.எஸ். போர்ட் ரோயல், டிகோண்டெரோகா வகுப்பு வழிகாட்டி-ஏவுகணை கப்பல் சென்றதாக அமெரிக்க கடற்படை கூறியது.

தனது சுயமாநிலமாக சீனா கருதும் தாய்வானைச் சுற்றி தொடர்ந்தும் ரோந்து பணிகளில் அமெரிக்க கடற்படையும் அதன் நட்பு நாடுகளும் ஈடுபட்டுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை, 18 போர் விமானங்களை தாய்வானின் வான் பரப்பிற்குள் சீனா ரோந்து நடவடிக்கைக்காக அனுப்பியது.

ஜனவரி மாதம் 39 விமானங்களை அனுப்பிய பின்னர் ரோந்து நடவடிக்கைக்காக சீன கூடுதல் விமானங்கள் தாய்வானுக்குள் அனுப்புவது இது இரண்டாவது தடவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க முன்னாள் அதிபர் ட்ரம்ப் மீதான டுவிட்டர் தடை திரும்பப் பெறப்படுமாம்

### டஸ்லா அதிபர் எலான் மஸ்க் அறிவிப்பு



அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீதான டுவிட்டர் தடையை திரும்ப பெறப்போகிறேன் என டெஸ்லா தலைவர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் தேர்தலில் தோல்வி அடைந்தாலும் டொனால்ட் ட்ரம்ப் அதனை ஏற்க மறுத்து பல மாகாணங்களில் வழக்கு தொடர்ந்தார்.

2021ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி பிரதிநிதிகள் சபை கூடவிருந்த நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் ட்ரம்ப் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

இதில் ஒரு காவலர் உள்ளிட்ட 5 பேர் கொல்லப்பட்டனர். கேபிடல் ஹில் வன்முறை என்று அறியப்படும் இந்த வன்முறைகளுக்கு காரணமாக இருந்ததாக டிரம்ப் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதையடுத்து தவறான தகவல்களை பகிர்ந்தார் எனக் கூறி டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்ட 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரின் டுவிட்டர் கணக்குகள் முடக்கப்பட்டன.

இதனை எதிர்த்து டிரம்ப் தொடர்ந்த வழக்கை கலிபோர்னியா நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இதனால் ட்ரம்பால் டுவிட்டரை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. தொடர்ந்து, தனக்கென்று ட்ரூத் என்ற பெயரில் தனி சமூக வலைத்தளத்தினை ட்ரம்ப் தொடங்கி தற்போது பயன்படுத்தி வருகிறார்.

இந்நிலையில் டுவிட்டர் நிறுவனத்தை சமீபத்தில் கைப்பற்றியுள்ள டெஸ்லா அதிபர் எலான் மஸ்க், டொனால்ட் ட்ரம்ப் மீதான டுவிட்டர் தடையை திரும்ப பெறப்போகிறேன் என கூறியுள்ளார்.

மாநாடு ஒன்றில் பங்கேற்று பேசிய மஸ்க், ட்ரம்ப் டுவிட்டர் கணக்கிற்கு விதிக்கப்பட்ட தடை தார்மீகரீதியில் தவறான மற்றும் முட்டாள்தனமான நடவடிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார். இருப்பினும் டுவிட்டருக்கு மீண்டும் திரும்ப போவதில்லை என்ற முடிவில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் உறுதியாக இருக்கிறார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஐபாட் MP3 பிளேயர் உற்பத்தியை நிறுத்த போவதாக அப்பிள் நிறுவனம் அறிவிப்பு

ஐபாட் MP3 பிளேயர் உற்பத்தியை நிறுத்தப்போவதாக அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது. 2001ம் ஆண்டு ஒக்ரோபர் 23ம் திகதி அப்பிள் நிறுவனமானது ஐபாட் டச்சை அறிமுகப்படுத்தியது. ஆப்பிள் நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவரான மறைந்த ஸ்டீவ் ஜாப்ஸ் ஐபாட் பிளேயரை அறிமுகம் செய்தார். MP3 வடிவத்தில் ஆயிரம் பாடல்களை சேமிக்கும் திறன் கொண்ட ஐபாட் டச் தரமான இசையை கேட்கும் வகையிலும், பாக்கெட் வடிவில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

தொலைபேசி அழைப்புகளை தவிர ஐ மெசேஜ் போன்ற வசதிகளும் இதில் இடம்பெற்றிருந்தன. இந்த நிலையில் 20 ஆண்டுகளுக்கு பிறகு ஐபாட் டச்சினை அப்பிள் நிறுவனம் நிறுத்தியுள்ளது. தற்போது சந்தையில் உள்ள ஐபாட் டச் மட்டுமே விற்கப்படும் என்றும் புதிதாக உற்பத்தி செய்யப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அண்ணா பல்கலைக்கழக கலந்தாய்வு; மே மாதம் 17ஆம் திகதி ஆலோசனை





அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கலந்தாய்வு குறித்து மே 17ம் திகதி கல்வியாளர்களுடன் ஆலோசனை நடத்தப்படும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்திருக்கிறார். சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர், நீட் தேர்வு முடிந்ததும் பொறியியல் கலந்தாய்வு நடத்த திட்டமிட்டுளோம். குளறுபடிகள் இல்லாமல் ஒன்லைன் கலந்தாய்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தொலைந்து போன சான்றிதழை திரும்பப் பெற பழைய கட்டணமே வசூலிக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

கட்டணத்தை பன்மடங்கு உயர்த்தி அண்ணா பல்கலைக்கழகம் அறிவித்ததற்கு எதிர்ப்பு கிளம்பிய நிலையில் இந்த அறிவிப்பை அமைச்சர் வெளி யிட்டார். தொடர்ந்து பேசிய அமைச்சர் பொன்முடி, உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 உதவித் தொகை வழங்கும் திட்டம் இந்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்படும் என்று தெரிவித்தார். அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் மாதம் தோறும் ரூ. 1,000 ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று இந்தாண்டிற்கான பட்ஜட்டில் தெரிவிக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

## தேசத் துரோக வழக்கு சட்டப்பிரிவை ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்யும் வரை வழக்கு பதியக் கூடாது



தேசத் துரோக வழக்கு சட்டப்பிரிவை ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்யும் வரை வழக்கு பதியக் கூடாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தேச துரோக வழக்குகளைப் பதிவு செய்யும் சட்டப்பிரிவை பயன்படுத்தி அரசியல் காரணங்களுடன் தனிநபர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் எனவே ஆங்கிலேயர் காலத்தில் இந்திய மக்களை அச்சுறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இந்த சட்டப்பிரிவை 124(A) ரத்து செய்ய வேண்டும் எனக் கோரி மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுநல அமைப்புகள் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு மீது பதில் அளிக்குமாறு ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவுப் பிறப்பித்த நிலையில், ஒன்றிய அரசும் எழுத்துப்பூர்வ வாதங்களை தாக்கல் செய்தது.


இதனிடையே இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல், தேச துரோக வழக்குகளைப் பதிவு செய்யும் சட்டப்பிரிவுகளை ரத்து செய்வது அல்லது மறுபரிசீலனை செய்வது தொடர்பான முடிவு எடுக்க கூடுதல் கால அவகாசம் வேண்டும் என கோரிக்கை வைத்தார். இதனை ஏற்று கொண்ட நீதிபதி, மறுபரிசீலனை செய்யும் வரை தேசத் துரோக வழக்குகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான விவரங்களை ஒன்றிய அரசு தாக்கல் செய்ய ஆணையிட்டது. தேசத்துரோக சட்டத்தை மறுபரிசீலனை செய்யும் பணியை 3-4 மாதங்களில் முடிக்கவும் வலியுறுத்தியது. இந்நிலையில் வழக்கு விசாரணை இன்று மீண்டும் நீதிபதி என்.வி. ரமணா தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, சட்டப்பிரிவை நீக்குவது தொடர்பாக பரிசீலித்து வருவதாக ஒன்றிய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, தேசத் துரோக வழக்குகளை தற்காலிகமாக பதிவு செய்யக்கூடாது என ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. 124(A) சட்டப்பிரிவு விவகாரத்தில் ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்யும் வரை வழக்குகளை பதிய தடை விதிக்கப்பட்டது. ஒன்றிய, மாநில அரசுகள் இப்போதைக்கு தேச துரோக வழக்குகளை பதிவு செய்ய மாட்டார்கள் என நம்புகிறோம் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

தேசத்துரோக சட்டத்தின் கீழ் ஏற்கனவே பதியப்பட்டுள்ள வழக்குகளின் விசாரணைக்கும் தற்காலிக தடை விதிக்கப்பட்டிருக்கிறது. தேசத்துரோக வழக்குகளில் சிறையில் இருப்பவர்கள் பிணை கோரலாம் என உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவின் மூலம் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டு 162 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த சட்டப்பிரிவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

### கடலூர் மாவட்டம் பெரியகுப்பத்தில்

## பொலிஸார் மீது கொள்ளையர்கள் பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல்



கடலூர் மாவட்டம் பெரியகுப்பத்தில் பொலிஸார் மீது கொள்ளையர்கள் பெற்றோல் குண்டு வீசினர். கடலூர் மாவட்டம் பெரியகுப்பம் பகுதியில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இது நடைபெற்றுள்ளது.

தற்போது இது செயல்படாமல் உள்ளது. கடந்த தானே புயலால் இந்த சுத்திகரிப்பு நிலையம் பாதிக்கப்பட்டதால் ஆலையின் பயன்பாட்டுக்கான இரும்பு உள்ளிட்ட தளவாட பொருள்கள் ஆலை வளாகத்தில் ஆங்காங்கே குவித்து வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அங்குள்ள இரும்பு பொருள்களை கொள்ளையடிக்க அடிக்கடி கொள்ளையர்கள் புகுந்து வருகின்றனர். அதன் அடிப்படையில் இன்று அதிகாலை கொள்ளை சம்பவம் குறித்து கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்தனர்.

அப்போது சுமார் 50 கொள்ளையர்கள் 6 பொலிஸார் மற்றும் தொழிற்சாலை காவலர்கள் மீது பெற்றோல் குண்டுகளை வீசினர். இதில் 3 பெற்றோல் குண்டுகள் வெடித்த நிலையில் அதிஷ்டவசமாக பொலிஸார் தப்பினர். பெற்றோல் குண்டு வீசப்பட்டதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் இந்த கும்பல் கடந்த சில நாள்களாக ஆலைக்குள் புகுந்து இரும்பு பொருள்களை திருடி வந்ததாகவும், இதுவரை 1,500 தொன்னுக்கு மேல் இரும்பு பொருள்களை திருடி உள்ளதாகவும் கூறப்படுகிறது.

# இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவதே என் இலட்சியம்

### முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு




சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தனியார் விடுதியில் ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்று வரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றுள்ளார். அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது சிறந்த ஏற்றுமதி நிறுவனங்களுக்கு முதல்வர் விருது வழங்கினார். பின்னர் பேசிய அவர் இந்தியாவின் ஏற்றுமதியில் தென் மண்டலம் முக்கிய பங்காற்றுகிறது. தமிழகம் 2030க்குள் ஒரு ட்ரில்லியன் பொருளாதாரமாக மாற வேண்டும் என விரும்புகிறேன். ஏற்றுமதி நிறுவனங்களுக்கு தேவையான ஊக்கத்தினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள 35 ஆயிரம் ஏற்றுமதியாளர்களில் 5 ஆயிரம் பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள். இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு 3வது இடத்தில் உள்ளது. தென் மண்டலங்களின் ஏற்றுமதி அடுத்த 5 ஆண்டுகளில் 35%ஆக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஏற்றுமதியில் தென் மண்டலத்தின் பங்களிப்பு 27%ஆக உள்ளது. ஏற்றுமதியில் சிறு, குறு, தொழில் நிறுவனங்கள் சிறந்த பங்க ளிப்புகளை அளித்து வருகின்றன. சிறு, குறு, தொழில் நிறுவனங்களுக்கு கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அறிவுசார் நகரம் உருவாக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. 43 புவிசார் குறியீடு பெற்ற பொருள்கள் ஏற்றுமதி மூலம் ஏற்றம் பெற முடியும்.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் 24 பொருள்களுக்கு புவிசார் குறியீடு கோரி விண்ணப்பித்துள்ளோம். தமிழ்நாட்டில் ஏற்றுமதி வர்த்தகம் அதிகரிக்க வேண்டும். ஒன்றிய அரசின் ஏற்றுமதி திட்டங்கள் உற்பத்தியாளர்களை கொண்டு சேர்க்க கூட்டமைப்பு முன்வர வேண்டும். ஒவ்வொரு துறைகளுக்கான ஏற்றுமதி வழிகாட்டி வெளியிட ஏற்றுமதியாளர்கள் உதவ முதல்வர் அழைப்பு விடுத்துள்ளார். தொடர்ந்து பேசிய அவர் தமிழ்நாட்டில் ஏற்றுமதி கட்டமைப்பை ஊக்குவிக்க ரூ.100 கோடி சிறப்பு நிதி அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை வெளிவட்ட சுற்றுச்சாலை திட்டத்துக்கு ரூ.2,250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை - கன்னியாகுமரி தொழில் வழித்தட திட்டத்துக்கு ரூ.1,200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டத்தின் 2ம் கட்டத்துக்கு ரூ.628 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என கூறினார்.

# ராஜபக்ஷ கூட்டிலிருந்து நழுவுகிறது உலமாக்கட்சி



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசினால் முஸ்லிம் சமூகமோ எமது கட்சியோ உருப்படியான எந்த நன்மையும் அடையவில்லை. நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புதில் அக்கட்சி பாரிய தவறுகளை செய்து விட்டதால் 2019 ஆம் ஆண்டு முதல் எமது கட்சி பொதுஜன பெரமுனவுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் என்பதை மீண்டும் நாட்டு மக்களுக்கு ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) அறிவித்துக்கொள்கிறது என அக்கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

மஹிந்த ராஜபக்ஷ நீண்ட கால அரசியல் அனுபவம் உள்ளவராக இருந்த போதும் தனது அருகில் கள்வர்களையும், கொள்ளையர்களையும் வைத்துக்கொண்டிருந்தமையால் நாடு அதலபாதாளத்தில் விழுந்து விட்டது. கடந்த நல்லாட்சி என்பது முஸ்லிம்களின் 99வீத வாக்குகளால் வந்தும் முஸ்லிம் சமூகத்துக்கு அநியாயமே செய்தது. இந்த நிலையில் மஹிந்த தலைமை யிலான பெரமுனவுடன் இணையும்படி எமக்கு வந்த அழைப்பை ஏற்று நாம் இணைந்தோம்.

ஆனாலும் ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து நாம் முற்றாகக் கைவிடப் பட்டோம். பெரமுனவில் ஒட்டியிருந்த கள்ள முஸ்லிம் தரப்புக்கே முன்னுரிமை கொடுத்தனர். 2019க்குப் பின் இன்று வரை பஸிலை ராஜபக்ஷஎம்மோடு எந்தச் சந்திப்பையும் மேற்கொள்ளவில்லை என்பதுடன் நாம் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஓர் அம்சம் கூட நிறைவேற்றப்படவில்லை. அது மட்டுமன்றி முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகள், நாட்டின் பிரச்சினைகள் பற்றி பல கடிதங்கள் அனுப்பினோம். அவை உதாசீனம் செய்யப்பட்டமையோடுநாட்டை கொள்ளையடிப்பதிலேயே ஈடுபட்டார்கள்.

ஆனாலும் நாம் பொறுமை காத்தோம். 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என முடிவெடுத்து 'தொப்பி பிரட்டி' என்ற அவப்பெயர் நம் சமூகத்துக்கு வந்துவிடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்.

இப்போது முழு நாடும் இவர் களைப்பற்றி தெரிந்திருப்பதால் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுத்து ராஜபக்ஷ கூட்டிலிருந்து விலகி விட்டோம் என்று தெரிவித்துள்ளார்.

## புலிகளின் தங்கம், டொலர் உகண்டாவில் பதுக்கலாம்!

### செங்கலடி ஆர்ப்பாட்டத்தில் கருத்து

விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட தங்கம், டொலர் மற்றும் கே.பியிடம் இருந்து மீட்கப்பட்ட புலிகளின் கப்பல்களின் உரிமை போன்றவற்றை உகண்டாவில் இருந்து மீண்டும் நாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என வைத்தியரும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் வடகிழக்கு இணைப்புச் செயலாளருமான கோல்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மட்டக்களப்பு -செங்கலடியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கோட்டா கோ ஹோம் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போதே இதை தெரிவித்தார்.

"இன்று இந்தப் போராட்டத்துக்கு முக்கியமான காரணம் நமது நாட்டில் டொலர் இல்லாததுதான்.

யுத்தத்தின் பின்னர் ராஜபக்ஷவினர் விடுதலைப் புலிகளின் பகுதியில் இருந்த தங்கங்களை எடுத்து உகண்டாவிற்கு அனுப்பியுள்ளனர். இதனை இந்த மக்களிடம் கேட்டால் கூட கூறுவார்கள்.

அதேபோல விடுதலைப் புலிகளிடம் இருந்த கப்பல்கள் புலிகள் அமைப்பின் கே.பி. என்பவரிடம் இருந்தது. அந்த கப்பல்களை அவரிடமிருந்து மீட்டு அதனை ராஜபக்ஷவின் உற வினரது பெயரில் வேறு நாடுகளில் வைத்திருக்கின்றனர்.

அவ்வாறே வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அபிவிருத்தி திட்டத்துக்கு என 100 பில்லியன் டொலர் வந்தால், அதனை அந்த நாட்டிலே டீல் போட்டு அரைவாசியை அவர்கள் எடுத்துக் கொண்டு மிகுதியை மட்டும் தான் இங்கு கொண்டுவருவார்கள்.

இவற்றுக்கு எல்லாம் முக்கியமானவர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட்ட குடும்பத்தவரே. இவர்களை சிறைக்கு அனுப்பிவிட்டு உகண்டாவில் உள்ள தங்கத்தை எல்லாம் திருப்பி எடுத்துவரவேண்டும். - என்றார்.







## மட்டக்களப்பில் மக்களை பீதிக்குள்ளாக்கிய முதலை!

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு புளியந்தீவு லேக்வீதி -02 இல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள காலப்பகுதியான நேற்று மக்கள் நடமாட்டம் இல்லாத நிலையில் சுமார் 15 அடி நீளமான முதலையொன்று ஆற்றிலிருந்து வெளியே வந்து, கரையில் நின்ற நாயொன்றைப் பிடித்து ஆற்றினுள் இழுத்துச் சென்றுள்ளது. .

இதன்போது மீண்டும் அம்முதலை கரையிலுள்ள தனது பாழியை நோக்கி வந்ததினால் மக்கள் பீதியடைந்து, பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்தனர். அவர்கள் வருகை தந்து பார்த்த போது அம்முதலை கரையில் மக்கள் சனநடமாட்டம் இருந்ததினால் தரைக்கு வராமல் நீரினுள் அமிழ்ந்திருந்தது.

இதனையடுத்து வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் யானைகளை விரட்டும் பட்டாசுகளை வெடிக்கச் செய்தனர். அப்போது முதலை ஆற்றை நோக்கிச் சென்று விட்டது. இதனையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

## பெரியநீலாவணையில் இரவு கரைவலைத் தோணி எரிப்பு



பெரியநீலாவணை கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான கரைவலைத் தோணி ஒன்று இனந்தெரியாத நபர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

பெரியநீலாவணையை சேர்ந்த சிவலிங்கம் தனுஜன் என்பவருக்கு சொந்தமான தோணியே, நேற்று முன்தினம் இரவு11 மணி யளவில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.


தோணி தீப்பற்றி எரிவதைக் கண்டவர்கள், அதன் உரிமையாளரின் வீட்டுக்குச் சென்று தகவல் தெரிவித்துள்ளனர். தனது உறவினர்களின் உதவியுடன் கடற்கரைக்கு விரைந்த தோணி உரிமையாளர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

இது தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் நேற்றுஅதிகாலை ஒரு மணியளவில் முறைப்பாடுகளை பதிவுசெய்துள்ளார்கள். இந்தச் சம்பவத்தால் தோணிக்கு அருகிலிருந்த மீன்பிடி உபகரணங்கள் பல முழுமையாக சேதமடைந்துள்ளன. கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் சுமார் 100 மீனவர் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயமாக பொலிஸாரோ அல்லது பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம சேவையாளரோ சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு உடனடியாக சமுகமளிக்கவில்லை என மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

## திருமலையிலும் தாக்குதல்





திருகோணமலையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் கபில அத்துகோரலவின் வீடு நேற்றிரவு தாக்கப்பட்டுள்ளது. இதனால் வீடு பாரிய சேதத்துக்கு உள்ளாகியுள்ளது.

அத்துடன், கந்தளாய் பிரதேச சபையின் ஐந்து உறுப்பினர்களின் வீடுகளும் பொதுமக்களால் தாக்கப்பட்டுள்ளன.

சுமார் 30 முதல் 50 பேர் வரை வந்து கற்கள் மற்றும் பொல்லுகளால் வீடுகளைத் தாக்கிச் சொத்துகளையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

# யாழிலும் கலவரம் ஏற்படுத்த முனைவார்கள் மக்களே எச்சரிக்கையாகச் செயற்படுங்கள்!

## அங்கஜன் எம்.பி. மக்களுக்கு அறிவுறுத்து



யாழிலும் கலவரத்தை ஏற்படுத்த முனைகிறார்கள். எனவே மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் மக்கள் தொடர்பு அலுவலகம் முன்பாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பதாகைக்கு இனந்தெரியாத சிலரால் தீ வைக்கப்பட்டுள்ள நிலையில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

யாழிலும் கலவரத்தை ஏற்படுத்த முனைகிறார்கள். தமது அரசியல் தேவைக்காக உசுப்பேற்றுபவர்கள் தொடர்பில் மக்கள் எச்சரிக்கையுடன் இருங்கள்.

இங்கு வன்முறைகள் இடம்பெற்றால் பாதிக்கப்படுவது எங்கள் மக்களே. நிதானித்து சிந்தித்து செயற்படுங்கள்.

யாழில் எனது அலுவலகம் எரிக்கப்பட்டது என பரவும் தகவல்கள் தவறானவை என்பதோடு, அலுவலக பதாதையிலும் சிறு பகுதி மாத்திரமே வன்முறையை தூண்டும் சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது. இந்தச்செயலூடாக யாழில்வன்முறையைதூண்டிகுளிர்காய நினைப்பவர்கள் தமது அரசியல் கோழைத்தனத்தைக் கைவிட வேண்டும்.

வரலாறு சொல்லும் தமிழர் வீரங்கள் இந்த கோழைத்தனத்தை ஏற்றுக் கொள்ளா.

நாட்டில் அமைதிவழி போராட்டங்களில் ஈடுபட்ட மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வன்முறைகளை நாம் கண்டித்துள்ள நிலையில் எம்மீது தாக்குதல் நடத்தி தமது அரசியல் சிறுபிள்ளைத்தனத்தை ஒரு தரப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நாள்களில் நாட்டின் அமைதி நிலவும் பகுதிகளாக வடக்கு மாகாணமும் யாழ்ப்பாண மாவட்டமும் இருக்கும்போது நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் அவசரகாலச்சட்டம், பாதுகாப்பு துறைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கருத்தில்கொள்ளாது இந்த அமைதியை சீர்குலைத்து அதனூடாக தமக்கான நிதி மூலங்களை பலப்படுத்தும் நோக்கில் சில அரசியல் கட்சிகளாலும், அதன் பிரதிநிதிகளாலும் முன்னெடுக்கப்பட்ட சமூக விரோத செயலே இதுவாகும்.

இருப்பினும் இதனைக் காட்டிக் கொடுத்து எங்கள் இளைஞர்களை நாம் எப்போதும் நெருக்கடிக்குள் சிக்கவைக்க மாட்டோம். ஆனால் இந்த கீழ்த்தரமான அரசியல் வலைக்குள் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்று எனதருமை யாழ். மாவட்ட மக்களை முதலில் கேட்டுக்கொள்கின்றேன்.

தமக்கெதிராக மாற்றுக்கருத்துடையோர் செயற்படக்கூடாது என்பவர்களும், தமக்கு எதிராக யாரும் செயற்படகூடாது என்றும் அதனால் தமது வெற்றி பறிபோகிறது என்பவர்களும், மக்களின் கண்ணீரை வைத்து அரசியலில் பிழைப்பு நடத்துபவர்களும், தேர்தலோடு ஒற்றுமையை இழந்தவர்களும் இந்த சம்பவங்களின் பின்னணியில் இருக்கிறார்கள் என்பதை மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு எங்களையும் எங்கள் ஆதரவாளர்களையும் அச்சுறுத்தி எம்மை விலக்கினால் தமது பாதை தெளிவாகும் என்ற தப்பெண்ணத்தை அவர்கள் கொண்டுள்ளார்கள். அது சாத்தியப்படாது.

நாட்டில் அமைதிவழி போராட்டகாரர்களை பாதுகாக்கும் செயலில் தெற்கிலுள்ள சட்டவல்லுநர்களும், புத்திஜீவிகளும் திரண்டுநிற்கும்போது, இங்குள்ளசிலர்சமூகவலைத்தளங்களில் வன்முறையை தூண்டும் கருத்துக்களை வெளிப்படுத்திவருகின்றமை எத்தகைய மனப்பாங்கை அவர்கள் கொண்டுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

எமது யாழ் மக்களுக்கான அபிவிருத்தியை பெற்றுத்தர வேண்டும் என்ற நோக்கில் நான் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் அதற்கான ஆணையை வழங்கியபோது, மக்களின் ஆணையை நிறைவேற்றுவதை நோக்காக கொண்டு செயற்பட்டவன் நான். மக்களுக்கு ஒன்றைச் சொல்லி, தேர்தல் வெற்றியின் பின்னர் மக்களை ஏமாற்றி நாடகமாடும் சிலரைப் போல நான் செயற்பட்டவனல்லன். மக்களுக்கான அபிவிருத்தியை அரசாங்கத்திடமிருந்து கேட்டுப் பெறுவதை நான் நோக்காகக் கொண்டு செயற்பட்டேன்.

கடந்த பொதுஜன பெரமுன அரசாங்கத்தில், பொதுஜன பெரமுன அல்லாத உறுப்பினரும், அவர்களின் சின்னத்தில் போட்டியிடாத உறுப்பினருமான நான் எனது மக்களுக்கான அபிவிருத்திகளை வென்றெடுப்பதில் எத்தனையோ தடைகளை எதிர்கொண்டேன். அவற்றையெல்லாம் பொறுமையோடும், நேர்மையோடும் கையாண்டு கடந்த காலங்களில் மக்கள் சேவையாற்றியுள்ளேன்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கும் நான், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் மக்களை தவறான பாதைக்குள் அழைத்துச் செல்கிறது என்பதையும், மக்களுக்கான அபிவிருத்தியை பெற்றுக்கொடுக்க முடியாது என்பதையும் உணர்ந்து அரசாங்கத்தின் பங்காளித்துவத்திலிருந்து எனது கட்சியை மீட்டு மக்களுக்கு நேர்மையாக செயற்பட வேண்டும் என்பதில் அர்ப்பணிப்போடு செயற்பட்டிருந்தேன்.

மக்களின் கோரிக்கையை ஏற்று இந்த அரசாங்கத்தை வெளியேற்ற வேண்டும் என தீவிரமாக செயற்பட்டு வருபவர்கள் நாங்கள். மக்கள் படும் துன்பங்களை நேரில் கண்டவர்கள் நாங்கள். மக்களுக்கான அரசாங்கத்தை நிறுவவேண்டும் என்பதில் தீவிரமாக நாம் செயற்பட்டுவருகிறோம்.

இந்த விடயங்கள் மக்களை சென்றடைய கூடாது என்பதிலும், தமது அரசியல் இயலாமையை இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தீர்த்துக்கொள்ளவேண்டும் என்ற குறுகிய மனப்பாங்குடையவர்களுமே இங்கு என் மீதான தாக்குதல் எனும் பெயரில் யாழ்ப்பாணத்தில் வன்முறையை தூண்ட எத்தனித்துள்ளனர்.

எனது மக்களுக்காக, என் மக்களும் பெறவேண்டிய அபிவிருத்தி உரிமைகளை அரசாங்கத்துடன் இணைந்திருந்து பெற்று கொடுத்தமை தவறு எனில் அந்த தவறை, இங்குள்ள ஏனைய அரசியல்வாதிகளைக்காட்டிலும் நான் அதிகமாகவே செய்துள்ளேன் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள் மாறலாம். ஆனால் 'எம் கனவு யாழ்' நோக்கிய பயணம் எம்மக்களுக்காக எப்போதும் தொடரும். இது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க ஏங்கும் என் உறவுகளின் கனவு.

அரசாங்கத்துக்கு எதிராக அமைதியாகப் போராடிவரும் போராட்டகாரர்களுக்கு எமது ஆதரவை நாம் வழங்கியுள்ள நிலையில், இதனை வன்முறை கொண்டு அடக்க நினைப்போருக்கு உதவி செய்யும் விதமாக எங்கள் பகுதிகளிலும் சிலர் செயற்படுகிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்து அவர்களை இனங்காண வேண்டியது அவசியமாகிறது.

எனவே அண்மைய நாள்களில் எமது மக்கள் அனுபவித்துவரும் அமைதியான வாழ்க்கையை சீர்குலைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு மக்களைத் துன்பப்படுத்த வேண்டாம் என அரசியல் கட்சியினரையும், தனிப்பட்ட குழுக்களையும், தனிநபர்களையும் உளமார கேட்டுக் கொள்கிறேன்.

மாறாக வன்முறையே தீர்வென எண்ணினால் அதைத் தமிழர் வீர மரபோடு எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன். வெறுமனே பதாதைகளை எரித்து எம் வீர வரலாறை கொச்சைப்படுத்தாதீர்கள். ஆனால் இன்று என்மீது கற்களையும் நெருப்பு பந்தங்களை வீசுவோரை நோக்கி காலம் தனது கரங்களை தனது மக்களை கொண்டே நீட்டக் காத்திருக்கும். இதுவே இன்று தெற்கில் நிதர்சனமாகியுள்ளது. – என்றுள்ளது.

# தெற்கின் எதிரொலி வடக்கிலும் அங்கஜனின் பதாகை எரிப்பு!

## அவரது சண்டிலிப்பாய் அலுவலகத்தில் சம்பவம்





யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் மக்கள் தொடர்பு அலுவலகம் முன்பாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பதாகைக்குதீவைக்கப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகத்தின் முன்பாக நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இரவு கூடிய சிலர் பதாகைக்கு தீ வைத்து விட்டு தப்பி சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கையில் அரச ஆதரவு அமைச்சர்கள், எம்.பிக்களின் அலுவலகங்கள், வீடுகள் என்பன தீயிட்டு கொளுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 30 இற்கும் மேற்பட்ட அரச அரசியல் பிரதிநிதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் வடக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அங்கஜன் இராமநாதனும் அரச ஆதரவாளர்களாக செயற்படுகின்ற நிலையில் நேற்று அங்கஜனின் அலுவலகப் பதாகை தீயிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எந்தவொரு தேவாலயத்தின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை

## நீர்கொழும்பு பதற்றம் குறித்து அருட்தந்தை தகவல்



எந்தவொரு தேவாலயத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என நீர்கொழும்பு பொலவலனா பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்த விதான தெரிவித்துள்ளார். சிலர் குறித்த பகுதிகளிலுள்ள தேவாலயங்கள் மீது முஸ்லிம்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என போலியான செய்திகளை பரப்பி வருகின்றனர் எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார். இவ்வாறான போலியான செய்திகளைக் கண்டு மக்கள் ஏமாறக்கூடாது எனவும் நீர்கொழும்பு பொலவலனா பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்த விதான தெரிவித்துள்ளார். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டும் வகையில் சிலர் இவ்வாறான போலியான செய்திகளைப் பரப்பி வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், இவ்வாறானவர்களின் முயற்சிகளை மக்கள் ஒன்றிணைந்து தற்போது முறியடித்துள்ளார்கள் எனவும் நீர்கொழும்பு பொலவலனா பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்த விதான தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.05.2022இல் வெளியிடப்பெற்றது.